# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.126/2019

சாட்சி : DW– 1
பெயர் : திரு. கலியகவுண்டர் தேதி : 10.03.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( வாதி தரப்பில்)

வாதி வழக்கு சொத்துகளை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், பாகம் செய்யாத சொத்துகளை பொறுத்து நாங்கள் ஆவணங்கள் ஏற்படுத்தி கொண்டதாகவும், அதனால் மேற்படி ஆவணங்கள் செல்லக்கூடியதல்ல என்றும், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் செய்துள்ளார். வாதி வழக்கில் முதல் அயிட்ட சொத்து பரம்பரை சொத்து என்றும், 2 வது அயிட்ட சொத்து முதல் அயிட்ட சொத்தின் வருமானத்தை வைத்துகொண்டு கிரயம் பெற்ற சொத்து என்றும், இவ்வழக்கில் சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார். பூர்விக சொத்து என்பது முத்துகவுண்டரின் பூர்விக சொத்து என்று சொல்லியுள்ளார். மேற்படி முத்துகவுண்டர் கடந்த 2008ம் ஆண்டில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். முத்துகவுண்டருக்கு 1, 3, 7, 10 பிரதிவாதிகளும், ஒரு வெள்ளையம்மாள் என்பவரும் வாரிசுகள் என்றால் சரிதான். வெள்ளையம்மாளுக்கு வாதியும், 8 மற்றும் 9ம் பிரதிவாதிகளும் பிள்ளைகள் என்றால் சரிதான். இவ்வழக்கின் 7ம் பிரதிவாதி அழகம்மாள் இதே சொத்துகளை பொறுத்து அ.வ.எண்.400/2018 என்ற வழக்கை பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் நாங்களும், மேற்படி அழகம்மாளும் சமரசம் செய்து கொண்டதால் அந்த வழக்கை அழகம்மாள் வாபஸ் பெற்று கொண்டார் என்றால் சரிதான். அழகம்மாள் அவருக்கு உண்டான பாகத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் தனித்தனியான விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி அழகம்மாளுடன் சேர்த்து

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 15:07:54 +0530

10ம் பிரதிவாதி மாரிமுத்துவும் சேர்ந்து மேற்படி விடுதலை ஆவணத்தை எழுதி கொடுத்தார்கள். 11 முதல் 14 வரை பிரதிவாதிகளுக்கும், அவர்கள் இருவரும் சேர்ந்து தனித்தனியாக விடுதலை ஆவணங்கள் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அவ்வாறும் சமரசம் பேசப்பட்டபோது வாதிக்கும், நாங்கள் பாகம் கொடுப்பதாக சொல்லியிருந்தோம் என்றால் சரிதான். ஆனால் வாதிக்கு அதன்பிறகு பாகம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால்தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி சமரசத்திற்கு வரவில்லை. தற்போது வாதிக்கு உண்டான பாகத்தை நாங்கள் கொடுக்க தயாராக உள்ளோமா என்றால் நாங்கள் பணமாக கொடுக்க தயாராக உள்ளோம். வாதியின் தாயாரை என் தகப்பனாரும், எனது பெரியப்பாவும் பராமரிப்பதால் வாதிக்கு பாகம் இல்லை என்று சொல்கிறேனா என்றால் இல்லை. எனது முதல் விசாரணை மற்றும் பதிலுரையில் வாதியின் தாயாருக்கும், பின்னர் வாதிக்கும் அவர்களின் திருமணத்தின்போது போதிய சீர்வரிசை செய்துவிட்ட காரணத்தினால் வாதிக்கு பாகமில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. 12.06.2016 தேதியிட்ட பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துகளை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்ற காரணத்தினால் இவ்வழக்கு பகுதி பாகப்பிரிவினைக்கானது என்ற அடிப்படையில் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மேற்படி சங்கதியை எனது பதிலுரையில் சொல்லவில்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை. பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து எனது பாட்டனார் முத்துகவுண்டர் 21.06.1999ல் கிரயம் பெற்றிருந்த சொத்து ஆகும். மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்தை எனது பாட்டனார் 27.08.2010ம் தேதியில் எனது பெரியப்பா சேப்பெருமாள் பெயருக்கு தானமாக எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சொத்தை தான் செங்கோடன், தமிழ்செல்வன், சரவணன், மற்றும் சின்னான் ஆகியோர்களுக்கு தனித்தனியாக கிரயமாக எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனவே மேற்படி சொத்தை இவ்வழக்கில் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 1ம்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 15:08:05 +0530

பிரதிவாதியின் பிள்ளைகள் மாரியம்மாள், பழனியம்மாள் ஆகியோர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் விட்டுவிட்டார்கள் என்றும், அதனால் அவசிய தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்ற அடிப்படையில் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மாரியம்மாள், பழனியம்மாளின் தகப்பனார் உயிருடன் உள்ள காரணத்தினாலும், அவர்கள் இருவரும் எந்தவொரு ஆவணமும் ஏறபடுத்தவில்லை என்ற காரணத்தினாலும், அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. சேப்பெருமாள் மற்றும் ஆனைக்கவுண்டரின் மற்ற வாரிசுகள் ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ள காரணத்தினால் அவர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது பாட்டனார் முத்துகவுண்டர் இறந்து 2 வருடம் கழித்துதான் நாங்கள் ஒரு பாகப்பிரிவினை பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை அனுசரித்துதான் பின்னிட்ட கிரய ஆவணங்களை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் முத்துகவுண்டரின் பெண் வாரிசுகளை சேர்க்கவில்லை என்றால் சரிதான். முத்துகவுண்டரின் பெண் பிள்ளைகளுக்கு வழக்கு சொத்துகளில் பாகம் உள்ளது என்றும், ஆனால் அவர்களை வைத்து நாங்கள் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்றும், முத்துகவுண்டரின் மகள் வழி வாரிசான வாதிக்கும், வழக்கு சொத்துகளில் 1/15 பாகம் உரிமை உள்ளது என்றும், எனவே வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு வழங்கப்படக்கூடியது என்றும், வாதியின் வழக்கை அனுமதித்து தீர்ப்பளிக்கவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.10 15:08:14 +0530